விபத்துகள் ஏற்படக்கூடிய இடங்களை ஏற்கெனவே காவல் துறைமூலம் ஆய்வு செய்து, எங்கெங்கே அதிகமான விபத்துகள் நடக்கின்றன என்று கணக்கிட்டு, தேவைப்படுகின்ற இடங்களிலே Stabilisation Centres அமைக்கப்பட்டுள்ளன. ஓர் இடத்திலே விபத்து நடந்ததென்றால் உடனடியாக உயிர் காக்கக்கூடிய 108 ஆம்புலன்ஸ் அங்கே விரைந்து செல்லும். அதற்குப் பின்னாலேயே emergency Medical Officer, emergency trained staff, emergency trained technicians ஆகியோர்களை உள்ளடக்கிய Stabilisation Centre அங்கே வந்து, முழுமையாக இருந்து விபத்துக்குள்ளானவர்களை நிலைப்படுத்தி vital parameters stabilise செய்து அதற்குப் பின்னாலே மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பக்கூடிய ஒரு நிலையை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். தமிழ்நாட்டிலே முதன்முதலாக தாம்பரம் மற்றும் பாடியநல்லூரில் இந்த Stabilisation Centre-களை நெடுஞ்சாலையை ஒட்டி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு அமைத்துள்ளது. இது மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. பல்லாயிரக்கணக்கான உயிர்கள் இன்றைக்குக் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கை அரசினுடைய ஆய்விலே இருக்கின்றது. கூடிய விரைவில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான அனுமதியைப் பெற்று உளுந்தூர்பேட்டையில் Stabilisation Centre அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 342, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

342—

ஆவின் பாலகம்

***53119—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யம் அரசு மருத்துவமனை வளாகத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணைக் கடல், அன்பின் சொரூபம், ஓய்வறியா தாயுரு சிம்மம், தமிழகத்தின் வளமைக்கும், வளர்ச்சிக்கும் வித்திட்ட உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து எனது பதிலை அளிக்க விழைகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் அரசு மருத்துவமனை வளாகத்தில் ஆவின் பாலகம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, மருத்துவமனை நிருவாகத்திடமிருந்து இட ஒதுக்கீடு மற்றும் அனுமதி கோரப்பட்டுள்ளது. இட ஒதுக்கீடு மற்றும் அனுமதி பெறப்பட்டவுடன், அங்கே ஆவின் பாலகம் அமைக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்மையின் முதன்மையாய் தமிழகம் திகழ்ந்திட, தரணி புகழ்ந்திட, தமிழர்களின் வாழ்வு சிறந்திட, தமிழினத் துரோகிகள் புறமுதுகிட்டோடிட, (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கை போர்க் குற்றத்திற்கு சர்வதேச விசாரணை வேண்டி, சட்டமன்றத்தில் தனித் தீர்மானம் நிறைவேற்றிய, தமிழினத்தின் தனிப் பெரும் தலைவராய், (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராய் விளங்கி பொற்கால ஆட்சி நடத்தும் பேராற்றல் வாய்ந்த பெண்ணரசி, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

2015 செப்டம்பர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் புறநோயாளிகளாக 500 முதல் 600 நபர்களும், உள்நோயாளிகளாக 60 நபர்களும் நாள்தோறும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். நோயாளிகளைப் பார்ப்பதற்கு பலரும் வந்து செல்கின்ற இந்த மருத்துவமனை வளாகத்தில், மக்கள் நலன் கருதி, ஆவின் பாலகம் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று தொடங்கப்படும் என்று அறிவித்த பொற்கால ஆட்சி நடத்திவரும் பொன்மனத் தலைவி, மாட்சிமை நிறைந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என் சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும் நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

திரு. வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் என்றாலே பால்கோவாவிற்குப் புகழ் பெற்ற ஊர். ஸ்ரீவில்லிபுத்தூர் பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் செயல்பட்டுக் கொண்டிருந்தது. தற்போது அந்தப் பாலகம் செயல்படாமல் இருக்கின்றது. எனவே, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் மீண்டும் ஆவின் பாலகம் செயல்படுவதற்கும், அந்தப் பாலகத்திலேயே பால்கோவா விற்பனை செய்வதற்கும், நவீன வசதிகளுடன்கூடிய விற்பனை நிலையம் ஒன்றை உருவாக்கித் தருவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் ஆவின் பாலகம் செயல்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆவின் பாலகத்தைக் கூடியவிரைவில், திறப்பதற்கும், அந்தப் பாலகத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரிலே மிகப் பிரபலமாக இருக்கின்ற பால்கோவாவை விற்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*